**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.123/2024 C/W 39/2013**

**பி. வா.சா. 1– பாலச்சந்தர்**

**நாள். 16.09.2025.**

**பி.வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எங்களுடைய சமுதாய சங்கங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு பின்பு நடைமுறைப்படுத்தாமல் கடந்த 1996 ம் ஆண்டு இரத்தாகிவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு சங்கம் கலைக்கப்பட்ட பிறகு என் தகப்பனார் சி.சுப்பிரமணியன், மற்றும் கதிர்வேல், முத்துச்சாமி ஆகியோர்கள் சேர்ந்து 2002 ம் ஆண்டு ஒரு அறக்கட்டளையை ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி அந்த சங்கமும் கலைக்கப்பட்டு பின்பு 2004 ம் ஆண்டு ஒரு அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு 2008 ம் ஆண்டில் நிர்வாகிகள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 2004 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளையில் எங்களுடைய சமுதாயத்தை சேர்ந்த மக்களை சேர்க்காததால் எல்லா கிராமங்களில் வசிக்க கூடிய எங்கள் சமுதாயத்தை சேர்ந்த அனைவரையும் சேர்ந்து புதிதாக ஒரு அறக்கட்டளை 2012 ல் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். 2012 ல் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளை தான் தற்போது வரை எங்கள் சமுதாயத்திற்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாத்து வருகிறது என்றால் சரிதான்.

தாவா சொத்து கடந்த 1986 ம் வருடத்தில் எங்கள் சமுதாயத்திற்காக வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி கிரையம் வாங்கப்பட்ட காலத்திலேயே வாங்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.40 ஆயிரம் என காண்பித்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு நான் தான் தகவல் சொல்லி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் சின்னச்சாமி என்றால் சரிதான். அவருக்கு தங்கவேல், வடிவேல், அண்ணாமலை, சுப்பிரமணி ஆகிய 4 மக்கள் என்றால் சரிதான். அண்ணாமலை என்பவர் எனது பெரியப்பா என்றால் சரிதான். என் பெரியப்பாவின் மகன் தான் மகுடீஸ்வன் என்றால் சரிதான். கிரையம் செய்து கொடுத்த முத்துச்சாமி என்பவரின் மைத்துனர்தான் வெள்ளைச்சாமி என்றால் சரிதான். என் தாயார் வீட்டுக் குடித்தனமாக இருந்தார் என்றால் சரிதான். என் தாயாருக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. விவசாயத்தில் இருந்து தனிப்பட்ட வருமானம் வருகிறது. என் அம்மா பெயரில் எந்தெந்த கிராமங்களில் நிலம் இருந்தது என்பதை காட்டுவதற்காக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

(இந்த வழக்கிற்கு தேவையில்லை என்று 3ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது.) என் தாயார் பெயரில் உள்ள கிரைய காலத்திலேயே அரசு வழிகாட்டுதலின் படி மதிப்பு ரூ.3,94,100/-ரூபாய் என்றால் இது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கு தாக்கல் செய்த பின்பு பதிவாளர் வந்து சாட்சி சொல்லிவிட்டு போன பிறகாவது தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். பின்பு அபராத தொகை செலுத்தப்பட்ட பின்புதான் அந்த ஆவணம் பதிவாளர் அலுவலகத்திலிருந்து விடுவிக்கப்பட்டது என்றால் சரிதான்.

கிரைய ஆவணத்தில் தாவா சொத்துக்களை விற்பதற்கு எங்களுடைய சமுதாய சங்கத்தில் பொதுக்குழுவில் எப்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதற்குரிய ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சமுதாய சொத்துக்களை ஏலம் விடுவதற்கு எந்த விதிமுறைகளும் இல்லை என குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை விற்பதற்கு எந்த விதிமுறைகளும் இல்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எங்கள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து மூப்பனார் சத்திரம் பழனி பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி மூப்பனார் சத்திரத்தில் மொத்தம் 17 அறைகள் உள்ளது என்றால் சரியல்ல. 10 அறைகளும் ஒரு ஹாலும் இருக்கிறது. 1985, 1986 ஆண்டுகளில் தரைத்தளத்தில் 3 கடைகள் இருந்தது என்றால் சரிதான். மேற்படி 3 கடைகளில் இருந்து வரும் வருமானத்தை வைத்தும் லாட்ஜிலிருந்து வந்த வருமானத்தை வைத்தும் திண்டுக்கல்லில் உள்ள 46 சென்ட் சொத்தை வாங்கியிருப்பதாக என் எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் அப்போது எனக்கு வயது 4 ஆகும். எங்கள் சங்கள் வேறு நிலங்கள் வாங்கி மனைகளாக பிரித்து விற்பனை செய்திருக்கிறதா என்றால் அதற்குரிய ஆவணங்களை பார்த்துதான் என்னால் சொல்ல முடியும்.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.16 20:25:42 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.